சுருக்கம்

பொது விநியோகத் திட்டம் – தமிழ்நாட்டில் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை 01.01.2015 முதல் 31.12.2015 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் ( எப்2) துறை

அரசாணை (நிலை) எண். 129

நாள் :21.11.2014
ஜய வருடம், கார்த்திகை– 5
திருவள்ளுவர் ஆண்டு – 2045

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.205, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 18.12.2013.
2. ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–5 கடிதம் எண்.இசிறப்பு2/17840/2014, நாள் 18.08.2014 மற்றும் 19.08.2014.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 01.01.2014 முதல் 31.12.2014 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை கண்காணிக்கும் வகையிலும், நியாயவிலைக் கடைகளிலுள்ள அத்தியாவசியப் பொருட்களின் இருப்பினை அவ்வப்போது அறிந்து அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் வகையிலும், புதிய குடும்ப அட்டைகளை உடனுக்குடன் வழங்கவும், போலிக் குடும்ப அட்டைகளை தவிர்க்கவும், பொது விநியோகத் திட்டத்தினை கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. இந்நிலையில், மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் தரவு தொகுப்பின்படி உள்ள குடும்ப அட்டைதாரரின் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய குடும்ப அட்டைகளை தயாரித்து வழங்கும் பொருட்டு, இந்திய மக்கள் கணக்கெடுப்பு துறையினரிடமிருந்து தமிழக குடிமக்களின் விவரங்கள் அடங்கிய கணினி தரவு தொகுப்பு எதிர்நோக்கப்படுகிறது என்றும், மக்களின் உடற்கூறு பதிவுகள் (Bio-Metrics) கணினியில் சேகரிக்கும் பணி நிறைவு பெற்று அதன் அடிப்படையில் மின்னணு அட்டை (Smart Card) குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு மேலும் சில காலம் ஆகும் என்றும் எனவே தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை 31.12.2014க்கு பின்னர் மேலும் நீட்டிக்க வேண்டியது அவசியமாகிறது என்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

4. தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளை 2015ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கும் வகையில் உள்தாள்களை அச்சிட்டு அவற்றை குடும்ப அட்டையில் இணைத்து குடும்ப அட்டையின் செல்லத்தக்க காலத்தை 31.12.2014க்கு பின்னர் 01.01.2015 முதல் 31.12.2015 வரை நீட்டிக்கலாம் என்றும், அனைத்து வகை குடும்ப அட்டைகளுக்கும் உள்தாள்கள் வழங்கும் வகையில் 2 கோடியே 20 இலட்சம் உள்தாள்கள் அச்சிடலாம் என்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும் உள்தாள்களை நியாயவிலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு 01.12.2014 முதல் வழங்கலாம் என்றும், குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் பெற வரும்போது அவர்களுடைய குடும்ப அட்டையில் 2015 ஆம் ஆண்டிற்கான உள்தாளினை இணைத்து வழங்குமாறு அறிவுரைகள் வழங்கலாம் என்றும், 2015ஆம் ஆண்டிற்கான வழங்கல் பதிவேட்டினை நவம்பர் 2014 மாத இறுதிக்குள் நியாயவிலைக் கடைகளுக்கு வழங்குமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்/கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைக் கோரலாம் என்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

5. இந்திய அரசு மக்கள் கணக்கெடுப்பு துறையினரிடமிருந்து, எந்த மாவட்டத்தில் அதிக அளவு குடிமக்களின் விவரங்கள் அடங்கிய கணினி தரவு தொகுப்பு முழுமையாக பெறப்படுகின்றதோ அம்மாவட்டத்தில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் பணி உடனடியாக துவக்கப்படும் என்றும், பின்னர் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும், அத்தகைய சமயத்தில் தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் விலக்கிக்கொள்ளப்பட்டு, அவற்றிற்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

6. மேற்கூறிய சூழ்நிலையில், மேலே பத்தி 3, 4 மற்றும் 5ல் குறிப்பிட்டுள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலினை செய்து, அதனை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து, அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1) தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 01.01.2015 முதல் 31.12.2015 வரை நீட்டிக்கப்படுகிறது. இதன் பொருட்டு தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளில் உள்தாளினை இணைக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

2) தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளை 2015ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கும் வகையிலும் புதிய குடும்ப அட்டைகள் மற்றும் நகல் குடும்ப அட்டைகளின் பயன்பாட்டிற்காகவும், 2015 என வருடத்தை குறிப்பிட்டு இரண்டு பக்கங்களும், வருடம் குறிப்பிடாமல் இரண்டு பக்கங்களும் இருக்கும் வகையில் இணைப்பில் உள்ளவாறும் தமிழ்நாடு அரசு முத்திரையை கொண்டும், 2 கோடியே 20 இலட்சம் உள்தாள்களை இலவசமாக அச்சிட்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு வழங்க எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

3) குடும்ப அட்டைகளுக்கான உள்தாள்களை அச்சிட்டு நவம்பர் 2014 மாத இறுதிக்குள் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு வழங்குமாறு அரசின் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

4) உள்தாள்களை நியாயவிலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு 01.12.2014 முதல் வழங்கவும் குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் பெற வரும்போது அவர்களுடைய குடும்ப அட்டையில் 2015ஆம் ஆண்டிற்கான உள்தாளினை இணைத்து வழங்குமாறும், உள்தாளினை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கியதற்கு ஆதாரமாக 2015ஆம் ஆண்டிற்கான வழங்கல் பதிவேட்டில் "2015ஆம் ஆண்டிற்கானஉள்தாளை பெற்றுக் கொண்டேன்" என்ற இரப்பர் முத்திரையிட்டு அதன் கீழே குடும்ப அட்டைதாரரின் கையொப்பம் / இடது கை பெருவிரல் ரேகை பெறவும் அனுமதியளிக்கப்படுகிறது.

5) 2015ஆம் ஆண்டிற்கான வழங்கல் பதிவேட்டினை நவம்பர் 2014 மாத இறுதிக்குள் நியாயவிலைக் கடைகளுக்கு வழங்குமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

7. மேற்காணும் அரசாணையினை உடனடியாக செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 4209/FS/P/14 நாள் 23.10.2014ல் பெற்ற ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.

நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18/35

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கூ.உ.(ம) நு.பா) துறை , சென்னை–9.
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
தேசிய தகவல் மையம், சென்னை–9. (மேற்படி அரசாணையை தமிழக அரசு வலைத்தளம் http://www.tn.gov.inல் வெளியிட கேட்டுக்கொள்ளப்படுகிறது)
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், கூட்டுறவு, உணவு
மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிநகல்.

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

21/11/2014.

பிரிவு அலுவலர்

21.11.14

# இணைப்பு

2015

| | | அரிசி | சர்க்கரை | கோதுமை | மண்ணெண்ணெய் | துவரம் பருப்பு | உளுத்தம் பருப்பு | சமையல் எண்ணெய் | அரசு நலத்திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | வேட்டி சேலை | பேன்/மிக்சி/கிரைண்டர் | அரசு காப்பீடு திட்டம் | கால்நடைகள் | உழவர் அடையாள அட்டை |
| ஜீலை | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| ஆகஸ்ட் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| செப்டம்பர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| அக்டோபர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| நவம்பர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| டிசம்பர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |

| | | அரிசி | சர்க்கரை | கோதுமை | மண்ணெண்ணெய் | துவரம் பருப்பு | உளுத்தம் பருப்பு | சமையல் எண்ணெய் | அரசு நலத் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | வேட்டி சேலை | பேன்/மிக்சி/கிரைண்டர் | அரசு காப்பீடு திட்டம் | கால்நடைகள் | உழவர் அடையாள அட்டை |
| ஜனவரி | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| பிப்ரவரி | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| மார்ச் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| ஏப்ரல் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| மே | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| ஜுன் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |

2015

| | | அரிசி | சர்க்கரை | கோதுமை | மண்ணெண்ணெய் | துவரம் பருப்பு | உளுத்தம் பருப்பு | சமையல் எண்ணெய் | அரசு நலத்திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | வேட்டி சேலை | பென்சில்/ கிரையான்ட் | அரசு காப்பீடு திட்டம் | கால்நடைகள் | உழவர் பாதுகாப்பு அட்டை |
| ஜூலை | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| ஆகஸ்ட் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| செப்டம்பர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| அக்டோபர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| நவம்பர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| டிசம்பர் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |

| | | அரிசி | சர்க்கரை | கோதுமை | மண்ணெண்ணெய் | துவரம் பருப்பு | உளுத்தம் பருப்பு | சமையல் எண்ணெய் | அரசு நலத்திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | வேட்டி சேலை | பென்சில்/ கிரையான்ட் | அரசு காப்பீடு திட்டம் | கால்நடைகள் | உழவர் பாதுகாப்பு அட்டை |
| ஜனவரி | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| பிப்ரவரி | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| மார்ச் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| ஏப்ரல் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| மே | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |
| ஜூன் | I | | | | | | | | | | | | |
| | II | | | | | | | | | | | | |

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

21/11/2014.

பிரிவு அலுவலர்
21.11.14

20149/F2/14

webadmin@tn.gov.in